விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 10 ஸபர் 1 இதழ் 254
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-10-84

மெதடிஸ்த, ஹாட்லி

## பருத்தித்துறை பாடசாலைகள் விரைவில் ஆரம்பமாகும்!

[கா. யோகநாமன்]

''பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி இம்மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி நவம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும், இக் கல்லூரிகளுக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையமும் இராணுவ முகாமும், நவம்பர் 19ம் திகதி முற்றாக அண்மையிலுள்ள வேறு இடத்திற்கு மாற்றப்படும்.

குருநகர் முகாமில், பிரிகேடியர் நளின் செனிவரத்ன, அதிபர்கள் குழு சந்திப்பின் போது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

அதிபர்கள் குழுவில் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர் டபிள்யு. என். எஸ். சாமுவேல், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி அரியரத்தினம் ஹாட்லி முன்னாள் அதிபர் திரு. கே. பூர

[5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

அமைச்சர் லலித் எச்சரிக்கை

# 'வட பகுதியில் தோற்றதால் தெற்கில் முயற்சிக்கிறார்கள்!'

(இ. கந்தசாமி)

வடபகுதியில் 'பயங்கரவாதிகள்' தோல்வியடைந்ததினாலேயே அவர்கள் தெற்கில் குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள் என்று நேற்று கொழும்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

கொழும்பில் பத்திரிகை நிருபர்களிடம் சமீபத்திய சம்பவங்கள் குறித்து விளக்கினார்.

''யாழ்ப்பாண மக்கள் இப்போது நல்ல ஒத்துழைப்பை அளிக்கிறார்கள். அங்கு இதனால் தாக்குதல்களை முறியடிக்க முடிகிறது'' என்றும் குறிப்பிட்டார்.

குச்சவெளியில் நேற்று பொலிஸ்நிலைய மொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது இருபகுதியினருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை' யென்றும் அமைச்சர் சொன்னார்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இருந்து கைதுசெய்யப்பட்டவர்களில் 500 பேரில் தற்சமயம் 65 பேரே காலி ''பூஸா'' வில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 15 பேர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்புக்கும் மற்றைய பகுதிகளுக்கும் வருபவர்கள் அடையாளஅட்டைகளை எடுத்துச்செல்லவேண்டும், பாதுகாப்புப் படையினர் திடீர் சோதனையை நடாத்தக்கூடும். பாதுகாப்புப்படையினர் ஒரு வாரத்துக்குள் பயங்கரவாதி

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## நிர்மலா தப்பஉதவியதுபற்றிய செய்தியை லலித் மறுத்தார்!

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறையிலிருந்து நிர்மலா நித்தியானந்தன் தப்பிச்செல்வதற்கு ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் உதவி செய்தார் என்ற பத்திரிகைச் செய்தி ஒன்றை அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுத் மறுத்தார்.

ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்

[8-ம் பக்கம் பார்க்க]

## நன்றி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள மக்கள் அமைதியைக் கடைப்பிடிப்பதற்காக அமைச்சர்லலித் நேற்று நன்றி தெரிவித்தார்

பிரதம நீதியரசர் பதவி;

## நீதியரசர் சர்வானந்தாவுக்கு அதிக வாய்ப்பு?

[கொழும்பு]

இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா நியமிக்கப்படுவது பெரும்பாலும் உறுதியகிவிட்டது.

பிரதம நீதியரசர் பதவியிலிருந்து திரு. என். டி. என். சமரக்கோன் கியூ. ஸி. ஓய்வுபெற்றதையடுத்து அப்பதவி வெற்றிடமாகவே இருந்துவருகின்றது.

சட்டமாஅதிபர் திரு. சிவா பசுபதி அல்லது நீதியரசர் சர்வானந்தா ஆகிய இருவரில் ஒருவரே பிரதம நீதியரசராக நியமிக்கப்படலாம என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனுல் சட்டமாஅதிபர் திணைக்

(8ம் பக்கம் பார்க்க)

## கார் விபத்தில் மாணவி பலி!

கார் எரிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலடியில் நேற்றுப்பிற்பகல் நடந்த கார் விபத்தில் 12 வயது மாணவி வீ. நிமாலினி பலியானார். மற்றும் இருமாணவிகளான ராதா (12 வயது), சுபா (11 வயது) காயமடைந்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

'குமாரின்மனு

## வேண்டுமென்றே தாக்கலான வழக்கு!'

(இ கந்தசாமி)

''அரசியல் நோக்கம் கருதி சில பத்திரிகைகளைத் தவிர்த்து வேறு சில பத்திரிகைகளுக்கு எதிராக மனுதார் வழககுத் தாக்கல் செய்துள்ளார். பல பத்திரிகைகள் அவர் தொடர்பான குறித்த செய்தியை பிரசுரித்த போதிலும் ஒரு சில பத்திரிகைகளே தெரிந்தெடுக்கப்பட்டு வாதிக்கு எதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ளது.'

இவ்வாறு சில பத்திரிகையாளர்களுக்கு எதிராக சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையின் போது 'ஐலன்ட்' பத்திரிகை சார்பில் ஆஜரான சட்டத்

(8ம் பக்கம் பார்க்க)

மின்னேரியா, குண்டசாலை—

## இன்று காலையே முடிவுகள் வரும்!

(இ.கந்தசாமி)

நேற்று நடந்த மின்னேரியா குண்டசாலை இடைத்தேர்தல் முடிவுகள் இன்று காலை ஏழு மணிக்குப் பின்னரே வெளியாகும் என்று தேர்தல் கமிஷனர் திரு சந்திரானந்த டி சில்வா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நேற்று இரவு 8 மணிக்கே வாக்குகள் எண்ணப்படும் வேலைகள் ஆரம்பமாகின.

மின்னேரியாவில், 51பேரும் குண்டசாலையில் 39 பேரும் போட்டியிட்டனர்.

இரு தொகுதிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கட்சிகளைச் சேர்ந்தவர்களே போட்டியிட்டனர்.

குண்டசாலையில் யு.என். பி

(8ம் பக்கம் பார்க்க)

பார்சல் புரளி:

## போக்குவரத்து பாதிப்பு!

[கொழும்பு]

பார்சல் புரளிகளினால் கொழும்பு நகரில் நேற்று சில இடங்களில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மருதானை மேம்பாலத்தின் கீழும் கண்ஆஸ்பத்தி

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் 7 மாணவிகள் மர்ம மறைவு!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பிலுள்ள பிரபல கல்லூரியான புனித திசிலியா மகளிர் கல்லூரியில் பயின்ற உயர் வகுப்பு மாணவிகள் ஏழு பேரை கடந்த புதன்கிழமை மாலை முதல் காண வில்லையென பெற்றோரும், பொறுப்பாளர்களும்மட்டக்களப்பு பொலிசில் புகார் செய்துள்ளனர்

இந்த மாணவிகளில் நால்வர் மட்டக்களப்பு திருக்குடும்ப கன்னியர் மடத்தின் பராமரிப்பில் இருக்கும் அனாதைமாணவிகளாவர்.

இம்மாணவிகளைக் காணவில்லை என்று கன்னியர்மட பொறுப்பாளர் வண. சகோதரி மேரி எடிக்கா பொலிசில் புகார் செய்துள்ளார்

சண்முகரத்தினம் ரேணுகா, சண்முகரத்தினம் ராதிகா, பிலிப் ரொசாறி, ஹாப்ஸ் அஞ்சலா ஆகிய நான்கு மாணவிகளும் தமது பராமரிப்பில் இருந்ததாகவும், கடந்த புதன்கிழமை மாலை முதல் இவர்களைக் காணவில்லையென்றும் கன்னியர்மட பொறுப்பாளர் வண. சகோதரி மேரி எடிக்கா மட்டக்களப்பு பொலிசில் புகார் செய்துள்ளார்.

மட்டக்களப்பு அதிகார் வீதியைச்சேர்ந்த பிலோமினா பவள

(5-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## எம். ஜி. ஆர். நிலைமை

(சென்னை)

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் இப்போது சுற்றுப்புறங்களை புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு அவரது நிலைமையில்முன்னேற்றம்ஏற்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## நெல்லியடியில் பலத்த சோதனை

பங்குக்குரவர் விசாரணை

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயம் நெல்லியடி புனித பரலோக மாலா ஆலயம், கரவெட்டி திருஇருதயக் கல்லூரி ஆகியவை சோதனையிடப்பட்டன

துன்னாலைப்பகுதியில் சில வீடுகளும் சோதனையிடப்பட்டன.

ஒரு இளைஞர் ஓடியபோது துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றதாகவும் அவர் மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது

நெல்லியடியில் நேற்று நடைபெற்ற சோதனையின் போது, பரலோகமாதா ஆலயப் பங்குக்குரவர் விசாரணை

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எல்லாசைஸ் திண்டுக்கல் இரும்புப்பெட்டிகளும் விற்பனைக்குண்டு. எவர் சில்வர் மாளிகை, நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 378

நல்ல நிலையிலுள்ள 34 ஸ்ரீ 7000 தொடரிலக்க டெலிகா வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. பாலசிங்கம், கந்தசாமி கோவிலடி, நீர்வேலி. 379

கோண்டாவில், குமரகோட்டம், சகலவசதியுடன் வீட்டுடன் நாலு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க:- M. S. பாலன், உரும்பராய் தெற்கு. (யூனிபோமுக்கு முன்னால்) 367

யாழ்ப்பாணம் இல. 9. 5ம் குறுக்குத் தெருவில் ½ பரப்பும் 2 குளிக் காணி விற்பனைக்கு உண்டு. யாழ். கன்னியர் மடத்திற்கு அருகாமையில். 361

நல்ல நிலையிலுள்ள 125 யமகா 86 Sri 9898 உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு;- சந்திரமோகன், ம/பா, வைத்திலிங்கம், கிறீஸ்தவ கல்லூரி முன்பாகம் கோப்பாய். 363

தொழில் ஸ்தாபனம் அமைக்கக்கூடிய மின்சார வசதியுடன் 10 பரப்பு காணி நுணுவில் சந்திக்கு கிட்ட கண்டிறோட்டில் விற்பனைக்குண்டு. ஸ்ரீவள்ளி காப்பி கிளப், சாவகச்சேரி. 402

நல்ல நிலையிலுள்ள 11ஸ்ரீ தொடர்பிலக்கமுடைய ஃபோட் அங்கிலியா கார் விற்பனைக்கு உண்டு. (40 M.P.G.) வேலைநாட்களில் பார்வையிடலாம். Trade Centre, 155, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 408

86 ஸ்ரீ தொடர் இலக்க Kawasaki (G.T.O.) மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: M. உமாகாந்தன், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. 411

நாவற்குழி சந்தியில் இருந்து கேரதீவு றோட்டில் ஒருமைல் தூரத்தில் றோட்டு ஓரமாக 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: சி. தில்லைநாதன் (ஆசிரியர்), நாவற்குழி, கைதடி. 417

## தேவை

ஆங்கிலம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, மனையியல் போதிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர், ஆசிரியைகள் தேவை. நேரில் விண்ணப்பிக்கலாம் — பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், 5, சென் ஜேம்ஸ் கிழக்குவீதி, குருநகர், யாழ்ப்பாணம். 404

## வாடகைக்கு

சகல வசதிகள், தளபாடங்களுடன் அறைகள் வாடகைக்குண்டு. நேரில் வரவும்.— பிராஜ்மல் என்ரபிறைசஸ், 5, சென் ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 405

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சமீபமாக வேலைபார்க்கும் பெண்கள் அல்லது மாணவிகள் தங்க சகல வசதிகளுடன் கூடிய அறை அல்லது அனெக்ஸ் ஆக ஒரு பகுதி வாடகைக்கு விடப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 406, c/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 406

## கல்வி

Industrial and House Wiring, மோட்டர் றீவைண்டிங், எலெக்றிக்கல் என்ஜினியறிங் ஆகிய வகுப்புக்கள் 1-11-84 ஆரம்பம். ஒமேகா ரெக்னிகல் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், (யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்) 273

## WANTED

Wanted experienced conductor coconut estate. Veddukadu, Punakari. Salary negotiable. Contact: 40, Rakka Lane, Chundikuli, Jaffna. 409

Wanted small car in excellent condition A 30, A 35, Ford Escort, Toyota (coralla) Sabaratnam, 40, Rakka Lane, Chundikuli Jaffna. 418

Immediate Vacancies. Mechanical Forman, Transport Officer, Heavy Machinery and Equipment Operators. Mechanics, Call over on Friday—3-00—5-00 p. m. Saturday—9-00—11-00 a. m. at Samacon Limited, 165, 4th Cross Street, Jaffna, 424

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் சுபாஸ் சந்திரன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. /ரி 216

ஆறுமுகம் சுபாஸ் சந்திரன் கைம்பெண் சாந்தினி, பன்னாலை, தெல்லிப்பழை.

— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**

பதிவாளர்

**க. வைரவநாதன்**

மனுதாரின் சட்டத்தரணி. 303

### ஒத்துமாறல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்டவர், பேராதனை அல்லது கொழும்பு மருத்துவ பீடத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

முகவரி:-
M. VELAUTHAM,
C/o, Mr. MARUTHAI,
Glenlyon Estate,
Agrapatana. (C.P)
423

### பின்றுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

மீசாலை தெற்கைச் சேர்ந்த இறந்தவராகக் கருதிய பஞ்சாட்சரம் பொன்னுச்சாமியின் நிர்வாக அதிகாரப்பத்திரம் வழங்கல் மனுச் சம்பந்தமாவது: சுப்பிரமணியம் கனகரத்தினம், மீசாலை தெற்கு, மீசாலை.

—மனுதார்

இல: 213/ரி.

எதிர்

1. சங்கரப்பிள்ளை மயில்வாகனம், பெரியமாவடி சாவகச்சேரி.
2. சங்கரப்பிள்ளை தம்பிமுத்து,
3. கனகசபை சிவபாதசுந்தரம், (இறந்தது)
4. பொ. கனகசபை சதாசிவம் மூவரும் மீசாலை தெற்கு, மீசாலை.
5. முத்து கனகசபையும்
6. பெண் மீனாட்சிப்பிள்ளையும் இருவரும் அல்லாரை தெற்கு, மீசாலை.

—எதிர்வாதிகள்

7. இராமலிங்கம் நிர்மலனும்.
8. பெண் சிவநேசமும் இருவரும் இராமலிங்கம் மில் சாவகச்சேரி.

இறந்த 3ம் எதிர்வாதியின் இடத்துக்கு 8ம் எதிர்வாதி பதில் எதிர்வாதியாக நியமிக்கப்பட்டது.

—பதில் பிரதிவாதிகள்

9. ஆறுமுகம் சுப்பிரமணியமும்.
10. பெண் ஈஸ்வரியும் இருவரும் மீசாலை தெற்கு, மீசாலை.

—குறுக்கிடும் எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 198 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**ஆ. குணநாயகம்**

பதிவாளர்

தயாரித்தவர்

**வீ.பொ. கார்த்திகேசு**

மனுதாரின் சட்டத்தரணி 331

---

அளவெட்டி தெற்கு காட்டுப்புலம்
காளி அம்பாள் ஆலயம்

## வளர்ச்சி நிதிக்கான அதிஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

23 பரிசில்களுக்கான அதிஷ்ட இலக்கங்கள் ஒழுங்கில் பின்வருமாறு:

1858, 1479, 1041, 413, 2581, 2763,
2679, 2111, 2208, 2246, 1818, 2684
1831, 1064, 1953, 1329, 1309, 53
2962, 1561, 2569, 870, 251.

23-11-84க் குமுன்னர் பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
ஆலய நிர்வாக சபையினர்.

[403]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

### பொன்னம்பலம் இராசேந்திரன் (B. Sc)

தோற்றம்: 30 | 3 | 1938



மறைவு: 7 | 11 | 1983

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே. எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எம் மனதைவிட்டு நீங்காது, உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்பு மனைவி, மகன், பெற்றோர்.
குமரக்கோட்டம், உரும்பிராய் மேற்கு. [425]

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

# அமைப்பு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கப் படத் தக்கது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படத் தகாதது) |
|---|---|---|---|
| 01 | எரிந்த யாழ். பொதுசன நூலகத்தை திருத்தலும், புனரமைத்தலும். | 1000/- | 250/- |
| 02. | தீயணைப்பு நிலைய வாகன பாதுகாப்பு சாலை (Garage)யும் அலுவலகமும் அமைத்தல் | 1000/- | 200/- |
| 03. | அராலி வீதி - முஸ்லிம் கல்லூரி வீதி சந்தியில் உப மின்னிலைய கியூபிக்கிள் [Cubicle] ரான்ஸ்போமர் பிளிந் (Transformer Plinth), பாதுகாப்பு வேலி (Protective fence) அமைத்தல் | 500/- | 150/ |
| 04. | குருநகர் சந்தையில் இரண்டு கூடங்கள் அமைத்தல் | 500/- | 150/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சீ. வீ. கே சிவஞானம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்
24-10-84. [419]

லண்டன்

# பிரெஞ்சுத் தூதரக வளவில் பிரிட்டிஷ் பொலிஸாருக்கு பரீட்சை!

## பாராளுமன்ற உறுப்பினர்கள், ஸ்கொட்லண்ட்யார்ட் ஆத்திரம்

லண்டன், அக். 25

பிரிட்டிஷ் பொலிசாரின் பாதுகாப்புச் சேவையைப் பரீட்சிக்க பிரெஞ்சுக்காரர்கள் சிலர் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் சோதனையொன்றை நடத்தினர். ஆனால் பிரிட்டிஷ் பொலிசார் இச்சோதனையில் தேறிவிட்டனராயினும் தம்மை அவமதித்துவிட்டதாகப் பிரெஞ்சு அதிகாரிகள் மீது கடும் ஆத்திரத்தை வெளியிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரெஞ்சு அதிபர் திரு. பிரான்ஸோமித்தரோன் பிரிட்டனிலுள்ள பிரெஞ்சுத் தூதரகத்துக்கு விஜயம்செய்திருந்தார். அப்போது தூதரக வளவுக்கு 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிசார் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் குண்டுகளை மோப்பம் பிடிக்கும் நாய்கள்சகிதம் அங்கு வந்தனர். தூதரகத் தோட்ட வளவை நாய்கள் நன்கு மோப்பமிட்டுத்தேடின. இறுதியாக இரு வெடி குண்டுகள் அங்கு ஒளித்துவைக்கப்பட்டிருப்பதை அந்நாய்கள் கண்டுபிடித்தன.

பிரெஞ்சு ஜனாதிபதியின் பிரிட்டிஷ் பயணத்தை முன்னிட்டுத் தீவிர பாதுகாப்புநடவடிக்கைகளைப் பிரிட்டிஷ் பொலிசாரே மேற்கொண்டிருந்தனர். தமது சேவையில் எந்தவிதத் தவறோ அல்லது கவலையீனமோ இருக்கமுடியாதென்பதே அவர்களின் வாதம்.

எனவே தம்மை அவமதித்து தமக்குச் சவால்விடவே பிரெஞ்சுத்தூதரகத்தில் அக்குண்டுகள் ஒழித்து வைக்கப்பட்டிருந்தனவென்றும், அவை தற்செயலா

(7-ம் பக்கம் பார்க்க)

### எம். ஜி. ஆர். உடல்நிலை

தமிழக சுகாதார அமைச்சர் திரு. எச். ஹாண்டே நேற்று வெளியிட்டுள்ள எம். ஜி ஆரின் உடல் நிலை விபரம் வருமாறு:-

உடல் வெப்ப நிலை சாதாரணமாக உள்ளது. இருதய இயக்கம் வழமைபோல் சீராக இருப்பதுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது

நினைவாற்றல் திருப்தியாக உள்ளது. நரம்பியல் நிலைமை திருப்தி. மூளையிலுள்ள வீக்கம் தணிந்துவரும் அறிகுறி தென்படுகிறது.

நைரோபி

## நிவாரணப்பணியில்சோவியத் போர் விமானங்கள்!

### அமெரிக்கா எரிபொருள் விநியோகம்!!

நைரோபி, அக் 25,

எத்தியோப்பியாவில் நிலவி வரும் மோசமான பட்டினி நிலைமையைச்சமாளிக்க எத்தியோப்பிய அரசுதீவிர நிவாரணப்பணிகளை முடுக்கிவிட்டுள்ளது.

எத்தியோப்பிய விமானப் படையில் உள்ள சோவியத் போர்விமானங்கள் நிவாரண வேலைகளுக்கென பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றுக்கான எரிபொருளை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.

சுமார் 6 லட்சம் பேர்வரை கடும் பட்டினியால் இங்கு பாதிக்கப்பட்டுள்ளனர். 50 ஆயிரம்பேரின் நிலைகவலைக்கிடமாக உள்ளது. தற்போதைய பட்டினிநிலை நீடிக்குமானால் பலர் விரைந்து இறக்கும் சூழ்நிலை ஏற்படும்.

சுமார் 100 பேர்வரை தினமும் தற்போது எத்தியோப்பியாவில் மடிந்துவருகின்றனர். விமானமார்க்கமாக அதிவிரைவான நிவாரண உதவிகளையே எத்தியோப்பியா எதிர்பார்க்கின்றது. கப்பல்மூலமாக பண்டங்கள் வருவது காலதாமதத்தை ஏற்படுத்துமென்று தெரிவிக்கப்பட்டது.

(கி)

தமிழ்நாடு

## எம்.ஜி.ஆர். உடல்நிலை: திருப்தியாகஇருந்தால் அமெரிக்காவில் சிறுநீரக சிகிச்சை!

### டாக்டர் பிரீட்மன் கூறுகிறார்!

சென்னை, அக். 25

திரு. எம். ஜி.ஆரின் உடல் நிலை திருப்தியாக இருந்தால் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கு அவரைநியூயோர்க் கொண்டுசெல்ல முடியுமென்று அமெரிக்க டாக்டர் பிறீட்மன் தெரிவித்தார்.

'இந்தியா எப்ரோட்' என்ற நியூயோர்க் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை எம் ஜி. ஆருக்கு நேற்றிரவு 'டயலிஸிஸ்' முறையில் சிறுநீரக சுத்திகரிப்பு நிகழ்ந்தது இதனையடுத்து அவரின் தேகநிலை மேலும் முன்னேறியிருப்பதாகக் கூறப்பட்டது.

இதேவேளை அமெரிக்க டாக்டர் பிறீட்மன் எம் ஜி.ஆருக்கு வழங்கப்படும் சிகிச்சைகுறித்து பூரண திருப்தி வெளியிட்டுள்ளார்.

நேற்று இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் திரு. ஹரி பொன்ஸ் தமது சென்னை கவுன்சலேட் அதிகாரி சகிதம் சென்று முதல்வர் எம். ஜி. ஆரைப் பார்வையிட்டார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உட்படத் திரைப்படத் துறைப் பிரமுகர்கள் பலரும் நேற்று அவரைச் சென்று பார்வையிட்டனர். (கி)

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு
உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல்
உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து
உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள
காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605




மணிலா

## அக்கினோ கொலைச்சம்பவம்: இராணுவத்தளபதி பதவி நீக்கம்!

மணிலா, 25,

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் திரு பேர்னிங்னோ அக்கினோ கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக பிலிப்பைன்ஸ்பிரதம இராணுவத்தளபதி பதவி நீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

அக்கினோ கொலையுடன் பிலிப்பைன்ஸ் இராணுவத் தளபதியும் சம்பந்தப்பட்டுள்ளார் என அக்கொலைச்சம்பவம்குறித்து விசாரணை செய்த விசேட ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இதனையடுத்தே பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு மார்க்கோஸ் இப்பதவி நீக்கத்தை மேற்கொண்டார்.

மணிலாவின் பொலிஸ் சேவை அதிபரும் அக்கினோ கொலை தொடர்பாக பதவி நீக்கஞ் செய்யப்பட்டுள்ளார். அக்கினோ கொலைவிசாரணை ஆணைக்குழு விசாரணைகளின் படி சுமார் 25 பேர் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ளனர்.

திரு. அக்கினோ கடந்த ஆண்டு அமெரிக்காவிலிருந்து நாடுதிரும்பும்போது மணிலா விமான நிலையத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(கி)

காபுல்

## ஆப்கானிஸ்தானில் கோரத்தாக்குதல்கள்!

### பிரெஞ்சு பத்திரிகையாளர் தகவல்!

பாரிஸ், அக்.25

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்களால் சோவியத் துருப்புகள்மீது சில இடங்களில் கோரத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று பிரெஞ்சுப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவர் அண்மையில் ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பிவந்தவராவார். பாரிஸில் வைத்து வழங்கிய பேட்டியொன்றின் போதே மேற்கண்ட தகவலை இவர் வெளியிட்டார்.

"ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர்களின் மறைவிடங்களில் சோவியத் ஹெலிகொப்டர்கள் சோவியத் பாரசூட் துருப்புக்களைப் போடுகின்றன

அப்போது பற்றைகளுக்குள்ளும், புதர்கள், மரங்களிலும் ஒளிந்திருந்து பாரசூட் துருப்புக்கள் தரையிறங்கியவுடன் ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் அத்துருப்பினரின் தலைகளை வாட்களால் வெட்டி எறிவதுடன் உடம்பின்மீதும் கோரமாகத் தாக்குகின்றனர்" என்று அப்பத்திரிகையாளர் கூறினார்.

(கி)

### மணிவாக்கு

மற்றவர்களுடைய ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில் செவிடனுகவும், பிறர்மனையை நோக்கும்போது குருடனுகவும், கோள் சொல்லும் விஷயத்தில் ஊமையாகவும் இருப்பவனுக்கு நல்வழிப்பாடம் போதிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவனே அறத்தின் உருவமாய்த் திகழ்கிருன்.

— நாலடியார்

# நமது நோக்கு

## 'பொற்றுலியோடெவையும்போம்'

விஞ்ஞான மாமேதை அல்பேட் ஐன்ஸ்டின் வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு அளித்த சிபாரிசு: $a = x + y + z$: a என்பது வாழ்க்கையில் வெற்றியாஞல் x உழைப்பு y விளையாட்டு என்று விளக்கினுர். பொறுமை இழந்த பெண்மணி ஒருவர் z என்னவென்று உரத்ததொனியில் கேட்டார்.

'அதுதான் வாயை இறுக்கி மூடிவைத்திருத்தல்' என்று சிரித்தார் அல்பேட்.

இளைப்பாறிய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு நடத்திய பிரம்மாண்டமான இராப் போசன வைபவத்தில் அவர் குறிப்பிட்ட கருத்து இதற்கு மாருனது.

தமது பாரியார் தமக்கு அன்றையதினம் இட்ட கட்டளை ''உங்கள் வாயைத் தங்குதடையின்றித் திறந்து விடாதீர்'' என்பதே.

அக்கட்டளைக்குத் தாம் மதிப்பளித்தபோதும் முதற் தடவையாக அதனை மீற வேண்டியிருக்கிறதென்று பரிகாசமாகப் பேசினுர்.

நாம் முன்னெருமுறை குறிப்பிட்டதுபோல இந்த வைபவம் அகில இலங்கையிலுமே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அறுநூறு பேர் பங்குபற்றிய இவ்விருந்தில் 'ஹோட்டல் ஒபெராய்' என்றும் காணுத குதூகலத்தின் காரணத்தை நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கின்ருேம்.

இதனை மிக உறைப்பாக விளக்கியவர் பிரதம விருந்தினரைப் பாராட்டிய இன்னெரு சட்ட வித்தகர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா. கருத்து நிறைந்த பேச்சில் டாக்டர்கொல்வின் பாராட்டு உச்சத்தைத் தொட்டிருக்கிறது.

''பெருமை படைத்த பரம்பரைக்கு உரித்தான திரு நெவில் சமரக்கோன் எந்தப் போருக்கும் பின்னிற்கார் என்று சொன்ன டாக்டர் கொல்வின், 'கடந்த காலத்தில் அரசுடன் மோதிய பிரதம நீதியரசர்கள் தங்கள் மோதலை திரைமறைவில் தீர்த்துக் கொண்டனர்; இன்று நிகழும் இழுபறியில் சுதந்திர சமரக்கோனை வெல்வது அரிது' என்ருர்.

இன்று நாட்டில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை பத்திரிகையில் படிக்கும் வாசகர் தினசரி 'போரில்' யாருக்கு வெற்றி என்பதையே கவனித்துப் படிக்கின்றனர்.

வடக்கிலோ, தெற்கிலோ இந்தமனப்போக்கு வலிமையடைந்து வருகிறது. வன்செயல்களும், கொள்ளைகள் குண்டு வெடிப்புகளும் இல்லாவிட்டால் இந்த வாசகர் கூட்டத்துக்கும் அவர்களுக்கு 'உணவு' பரிமாறும் பத்திரிகைகளுக்கும் அதோகதி என்பது நிச்சயம்.

இச்சம்பவங்கள் முக்கியமற்றவை என்று நாம் கூறவில்லை. ஆனுல் இந்தக் காட்டு மரங்களை இனங்கண்டு கணக்கெடுக்கும் நாம் காட்டின் முழுமையை மதிப்பிடத் தவறிவிடுகிறேம்.

ஆங்கிலத்தில் சொல்வது போல் 'மூக்குக்கு அப்பாலே பார்க்க முடியாத கண்களால் பயன் என்?''

அன்று ஆனைக்கோட்டையில் வெற்றி, இன்று அராலியில் தோல்வி; அன்று அம்பலாங்கொடையில் வெற்றி, இன்று அம்பிட்டியாவில் தோல்வி என்று கணக்கிடும் அப்பியாசம் நாட்டுக்குயிரான, நாட்டின் உயிருக்கு உயிரான பெரு விடயங்களை அலட்சியம் செய்ய உதவுகிறது.

''ஆட்சியின் ஆன்மா நீதி, நீதிதளம்பிஞல் சட்டம், ஒழுங்கு நாட்டில் நிலவா; ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்றேல் நாகரிக வாழ்வு மறைந்துவிடும்'' இவ்வாறு சுருங்கச்சொல்லி விளங்கவைத்த திரு, நெவில் சமரக்கோன் ஆணித்தரமாக வற்புறுத்திய கருத்து ஜனநாயக ஆட்சியில் வாழும் மக்கள் சிரமேற் கொள்ளவேண்டியது.

''சட்டங்களாலும் அரசியல் சாசனங்களாலும் நீதியை நிலைநாட்ட முடியாது. இவை அதற்கு உதவும் சாதனங்களே!

''சுதந்திரமாக தம் சொந்தக் கால்களில் நின்று நீதிக்கு வாதாடும் வழக்கறிஞர்களும், நடுநிலைமையில் நின்று நீதிவழங்கும் நீதிபதிகளுமே நீதியின் காவலர்'' என்று கர்ச்சித்தார் நீதியின் காவலர் நெவில்.

வாழ்க்கையில் வெற்றி பெற வாய்மூடவேண்டிய கட்டங்கள் உண்டு. ஆனுல் நீதிக்குப் பங்கமென்றுல் அதற்கு வெளுத்து வாங்க வேண்டிய அவசியமும் உண்டு.

அரச நீதியே சைவநீதி என்று நாம் கொள்ளுவது வழக்கம். நாட்டிலே கல்வி, யறிவு, ஒழுக்கம் குன்றுவதும் சமய பக்திஅருகுவதும். பருவமழை தவறுவதும் பஞ்சம் பட்டினி தொற்று நோய் கொடுமைகள் மலிவதும், கன்னம் களவு கொலை முதலிய தீத்தொழில்கள் பெருகுவதும் அரச நீதி தளம்புவதைக் குறிக்கின்றன.

எந்தச் சமுதாயத்திலும், எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளவேண்டிய உண்மை.

நாட்டின் வருங்காலத்தில் நீதிக்குச் சவால் ஏற்படுமாயின் அதனைப் பாதுகாக்கச் சட்ட வல்லுநர் மட்டுமல்ல அவர்களுக்கு ஆதரவாகச் சமூகம் முழுவதுமே தோளோடு தோள் கொடுத்தல் இன்றியமையாதது.

மனித வாழ்வுக்கு அடிப்படைப் பலமளிக்கும் நீதி போனுல் அது 'தாலியை' இழந்த நிலையென்பது தெளிவு.

## இன்று எண்பதாவது பிறந்ததினம்:

# தன்னலங்கருதா தலைமைப் பண்புடைய தம்பர்

''ஈழநாடு'' ஆசிரிய ஆலோசகராக அரும் பணி புரிந்த தம்பர் மாஸ்டர் ஒரு ஸ்தாபனம். இதனை இன்று நினைவு கூருவதில் நாம் பெருமையடைகிறேம்.

-ஆர்

1920-ம் ஆண்டளவிலேயே திரு. தம்பர் அவர்களோடு நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அக்காலத்திலேயே யாழ்ப்பாணம் வாலிபர்சங்கம் ஆரம்பித்தது. வாலிபர் மகாநாட்டுக் கூட்டங்கள் நடைபெறும். இந்திய தேசிய மகாசபையின் வழியில் நின்று பணியாற்றிச் சுதந்திரம் பெறமுயன்ற பல இளைஞர்களும் (அக்காலத்தில்) தலைவர்களும் பணியாற்றிய மகாநாடு இது என்பதை எவரும் அறிவர். சமாசனம், சமபோசனம், போன்ற பேச்சுக்கள் புதிதாக அடிபட்டகாலம் அது. வைதிகர்கள் சிலர் இவற்றை வெறுத்தகாலம் அது. இம்மகாநாடுகளில் பாரதியார் பாடல்கள் படிக்க வேண்டும்; பாரதியாரைப்பற்றிப்பேசவேண்டும் என்றெல்லாம் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் வற்புறுத்தப்பட்ட காலம் அது. இப்போது பாரதியாரைப்பற்றிப் பேசுவதும் அவர் பாடல்களைப்பாடுவதும் நூதனமல்ல. அக்காலத்தில் வாலிபமகாநாட்டுக்கு இப்பணியைச் செய்வதற்கு மாணவனுயிருந்தயான் மகா நாட்டாரால் பெரிதும் பயன்படுத்தப்பட்டேன். பாரதியார்பாலும் அவர்தம் பாடல்களிலும் எனக்கிருந்த ஆர்வத்துக்கும் மதிப்புக்கும் அளவேயில்லை. வாலிபர் மகாநாட்டுப்பணிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அப்போதே எனக்கு ஏற்படலாயிற்று. திருவாளர்கள் M. S. இளையதம்பி, T.N. சுப்பையா, கலைப்புலவர் க. நவரத்தினம், K. நேசையா, S. H. பேரின்பநாயகம், ஈழகேசரிப் பொன்னையா, A E. தம்பர் என்றிவர்கள் மத்தியில் கலந்துபணியாற்றும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அக்காலந்தொட்டே திரு. தம்பர் அவர்கள்மீது எனக்குப் பெருமதிப்பு ஏற்படலாயிற்று. அந்த மதிப்பு வளர்பிறை போலவளர்ந்து வருவதாயிற்று காந்தியடிகள் இலங்கைக்கு வந்தபோது திரு. தம்பர் அவர்கள் எடுத்துக்கொண்ட பங்கும் பிறவும் யாவரும் அறிந்தவையே.

திரு. தம்பர் யாழ்மத்திய கல்லூரி அதிபராக இருக்க, அவரின் கீழ்ப்பணியாற்றுவது பொதுவாக ஆசிரியர்களனைவர்க்கும் மிகவிருப்பமான தொன்று. மாணவர்கள் அவரைப் பெரிதும்விரும்பினர். அன்பாகநடப்பதில் திரு. தம்பர் அவர்களுக்கு ஒரு தனித்திறமையுண்டு. அவர்ஒரு கிறிஸ்தவர். அவர் கிறிஸ்தவர்தானே என்று இந்துக்கள் சந்தேகப்படக்கூடிய அளவுக்கு அவர்களது விரிந்த மனப்பான்மை விளங்கியது, அவரது சமரச மனப்பான்மையை யான் பலமுறை வியந்ததுண்டு அதை அறிந்தோர் அனைவரும் வியவாமலிருக்க முடியாது. நிற்க

கடந்த 50, 55 ஆண்டுகளுக்குள் ஆசிரியர்களுடைய நலனுக்கும் உரிமைகளுக்குமாகப் போராடிய தலைவர்கள் பலர். ஆயின் திரு. தம்பர் அவர்களைத்தவிர மற்றையோர்களில் ஒவ்வொருவரும் கால அளவுக்குமட்டுமே பணிபுரிந்தவர்கள். திரு. தம்பர் அவர்களுடையபணி தனிச்சிறப்பு வாய்ந்து. ஏனெனில் அவர் இவ்வுலக வாழ்வை ஒருவிய காலம்வரை இப்பணியில் முன்னணியில் நின்றவர். இந் நெடுங்காலத்தில் அவர்தலைவராக இருக்கும் வாய்ப்புப் பெருதகாலம் ஏதாவது இருந்திருப்பின் அக்காலத்திலும் அவர் இப்பணியில் ஒரு தலைசிறந்த ஆலோசகராகவேனும் இருந்திருப்பார். இன்றியமையாத ஒருவராக இருந்திருப்பார்.

ஒவ்வொரு விஷயத்திலும் தெளிவான கருத்தையுடையவராகத்திகழ்ந்தார். பொது ஜன அபிப்பிராயத்தை வரவேற்பவராகவும் திகழ்ந்தார். தம்முடைய கருத்துக்களை உறுதியாகவும் தெளிவாகவும் கூறிவிடுவார். ஆயின் பெரும்பான்மையோர் கருத்துக்களை எடுத்துச்சொல்வதில் தவறமாட்டார்.

அவரோடு மாறுபட்டு அவரை யாராவது கண்டிப்பார்களாயின் அதனைமிக்க பொறுமையோடு கேட்டுக் கொள்வார். பரபரப்புக்காட்டமாட்டார். கடைசியில்எழுந்து நின்றுதம்மை கண்டித்தவர் மீதும், சிலகாலங்களில் தம் மீதும் நகைச்சுவையான பரிகாச வர்த்தைகளைப்பேசி அக் கண்டனங்களைத் தெரிவித்தோரும் தம்பக்கமாகும் படி செய்துவிட்டார் பெரிய பூசல்களுக்கிடையேயும் சிரிப்பையுண்டாக்கி விடும்திறம் அவருக்கமைந்திருந்தது. மாறுபட்டகட்சிகளைச் சந்து செய்

(5-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

**வித்துவான் க. கி. நடராஜன்**

## வெள்ளிச்சிந்தனை

### சமய உணர்வு

மனிதப் பிறவிக்கு உள்ள சிறப்புக்களில் முதலிடம் வகிப்பது நீண்ட இளமைக் காலமாகும். ஒருவன் தனக்கும் தன் சமூகத்துக்கும் பயன்படத்தக்க இனிய வாழ்வின் அடிப்படைகளையும் பழக்கங்களையும் தன் இளமைக் காலத்திலேயே பழகிக்கொள்ள வேண்டும். ஒழுங்கற்ற இளமையையும் சிறப்பான - புகழான - எல்லோர்க்கும் பயன்படும் வாழ்வையும் உடையவர்கள் மிகவும் அருமையாகவே காணப்படுகின்றனர்.

சமயவாழ்வில் ஒருவனின் இளமைப்பருவம் சரியான பயிற்சியிலும், நல்ல முன்மாதிரியிலும் அமைய ஒவ்வொரு தாய் தந்தையருமே பொறுப்பாக இருக்கவேண்டும்.

திருஞானசம்பந்தரின் தாயார் பகவதியார். இவர் ஞானக் குழந்தைக்குப் பாலூட்டும்போது சிவசிந்தையிடன் சிவபக்தியையே பாலாக ஊட்டினுர் என்பர் சேக்கிழார்.

சைவசமயத்தை அபிவிருத்தி செய்த வேண்டும் என்ற சமய அபிமானம் நாவலருக்குப் பள்ளிப் பருவத்திலேயே ஏற்பட்டது.

இக்காலத்துச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பணத்தின் அருமையும், உத்தியோகத்தின் அவசியமும், மொழியின் பிரதானமும் போதிக்கப்படுவது போன்று சமய உணர்வும் சமயத்தின் அவசியமும் போதிக்கப்படுவதில்லை.

சில சமயக் கருத்தரங்குகளிலும் சொற்பொழிவுகளிலும் சைவத்தின் மேன்மையும் அதனுல் நாம் அடையத்தக்க இக, பர, தேச, ஆன்ம லாபங்களை விபரிக்கின்ருர்களேயன்றி தம் தம் வாழ்க்கைமுறையில் சமய உணர்வினை அனேகர் வலியுறுத்துவதில்லை.

சிலர் வியாபாரம் செய்வது போன்று குறிப்பிட்ட நலன்களுக்காகச் சமயத்தை அனுசரிக்கின்றனர். சிலர் அச்சத்தாலும் சிலர் அடிமைப்பண்பாலும் சமய ஒழுக்கத்தைக் அனுட்டிக்கின்றனர் என்று சொல்லத்தக்கதாகவே உள்ளது. நம் சமுதாயத்தில் சைவப்பண்பும் ஒழுக்கமும் நீடுநிலைத்து ஓங்கும்படியாகநம்மத்தில் பலர் உளர்என்று சொல்லமுடியாத நிலை நீடிக்கிறது.

''யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாகமுடி''கின்றவாழ்வு முறைக்கு மாற்றத்தை உண்டுபண்ணும் வகையில் ஒவ்வொருவரின் சிந்தனையிலும் செயலிலும் இரத்தத்திலும் சமயஉணர்வும் ஒழுக்கமும் பளிச்சிட வேண்டும்.

வேதநெறி தழைத் தோங்க
  மிகு சைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலியப்
  புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித்
  திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
  திருத்தொண்டு பரவுவாம்

-சேக்கிழார்

—அருளாளன்

# வேலவனை வேண்டுவோம்

இராகம்: அடாணு தாளம்: ஆதி

பல்லவி

கூறுமடியார்கள்வினை தீர்க்கும் ஐயன்வேல்
குன்றமெல்லாம் நின்றுடுங் குமாரவேல் (கூறு)

அனுபல்லவி

சீறிவரும் பவவினைகள் தீர்க்கும் சிங்காரவேல்
தேவாதிதேவர்களைச் சிறைவிடுத்த வெற்றிவேல் (கூறு)

சரணம்

அல்லற்கடலலையை அழித்துவிடும் வேல்
அகந்தைக்கிழங்கை அகழ்ந்தெறி செவ்வேல்
வெல்லற்கரிய வெற்றிவேல் என்றும் நீர்
வேலிப் பதியழகாய் வீற்றிருக்கும் வேல் (கூறு)

— முருகதாசன்

[நீர்வேலி கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவம் 3-ம் நாள் இன்று]

# யாழ். பல்கலைக்கழகத்தில்

## மாணவர் இன்றுமுதல் அனுமதி

[மாவிட்டபுரம்]

யாழ். பல்கலைக்கழகத்தில் அடுத்த வருடம் அனுமதி பெறும் மாணவர்கள் இம் மாதம் 25-ம் திகதிமுதல் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். யாழ் பல்கலைக்கழகத்தில் அடுத்த ஜனவரி முதல் அனுமதி பெறும் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர்கள் இம் மாதம் 25-ம் திகதிமுதல் 31-ம் திகதிவரை குறிப்பிட்ட துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தினத்தில் பதிவுசெய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் விசேட ஆங்கில வகுப்பு நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யவே இவ் விசேட வகுப்புகள் நடாத்த உத்தேசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## தீபாவளிக்கொண்டாட்டத்தில்தகராறு:

# ஒருவர் பலி!

## இன்னொருவர் ஆஸ்பத்திரியில்

(வவனியா)

வவனியா தவசிக்குளத்தில் நேற்று முன்தினம்இரவு ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமானர் இன்னொருவர் காயத்துடன் வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தீபாவளிக் கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட தகராறின் போதே இக்கொலை நடந்ததாகக் கூறப்படுகிறது

மூன்று முறிப்பைச் சேர்ந்த அனில்முன சிங்கா என்பவரே மரணமானவராவார். அதே இடத்தைச்சேர்ந்த எயர் சிங்கா என்பவர் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நாளை நடைபெறும் பாராட்டு விழா

(வண்ணர்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர்பேரவைசேவை ரீதியில் மூப்புப் பெற்ற இப் பேரவையின் இரண்டு தொண்டர்களைக் கௌரவிக்க விருக்கிறது.

சமூக சேவையிலும் சமயப் பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டு செயற்பட்டு பொது சேவைக்குரிய பதவிகளைப் பெற்றமையை கௌரவிக்கும் வகையில் இவர்களுக்கு இப் பாரட்டுவைபவம் நடைபெறவிருக்கிறது.

சனிக்கிழமை மாலை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்திற்கு இப்பேரவையின் தலைவர் திரு. தி.சி.சண்முகலிங்கம் தலைமை தாங்கவுள்ளார் யாழ்.மாநகர ஆணையாளர் யாழ் நீதிமன்ற மேலதிக நீதிபதி உட்பட பலர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பேரவையின் மூப்பு உறுப்பினர்களான திரு சி. பாலசிங்கம், திரு.இ.சற்குருநாதன் ஆகிய இருவரும் இவ் வைபவத்தில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## எழுத்தாளர் விடுதலை

(பண்டத்தரிப்பு)

கடந்த 18ம் திகதி வியாழக்கிழமை இராணுவத்தினர் மாதகலை முற்றுகையிட்டு சோதனை நடத்திய போது விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாதகல் செல்வா என்று அழைக்கப்படும் எழுத்தாளர்செல்வரத்தினம் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் கடந்த நான்கு நாட்களாக குருநகர் இராணுவ முகாமில் விசாரணை செய்யப்பட்ட பின்னர்விடுதலைசெய்யப்பட்டார்.

இவரை மீண்டும் இம்மாதம் 27ம் திகதி விசாரணைக்காக குருநகர் முகாமுக்கு வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

# "பலர்கல்விமான்களானலும் சிலரே பக்திமான்கள்"

## வித்துவான் பாராட்டுவிழாவில் ஆதீன முதல்வர்

(சுழிபுரம்)

''கல்விமான்களாகப் பலர் விளங்கினலும் சிலரே பக்திமான்களாக விளங்குகின்றனர். இரண்டும் கைவரப்பெற்றவர் எங்கள் எல்லோரது பாராட்டுக்கும் உரியவராக விளங்கும் வித்துவான் மு.சபாரத்தினம். நாடறிந்த நல்ல பேச்சாளர்கள் வரிசையில் ஒருவராக இருந்து சங்ககாலத் தமிழை சொல்லாலும் எழுத்தாலும் பரப்பிவரும் இவரது சேவையை தமிழ் கூறும்நல்லுலகம் நன்கு பயன்படுத்த வேண்டியது கடமையாகும்,

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் வித்துவான் மு. சபாரத்தினம் சேவை நலம் பாராட்டு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

காரைநகர்கலாநிதி ஆ தியாகராசா மத்தியமகா வித்தியாலய ஞாபக மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் திரு. செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது வித்துவான் மு.சபாரத்தினம் தம்பதிகள் மங்கள இசையுடன் இல்லத்திலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர் பெரும்தொகையான சமய தமிழ்தொண்டர்கள் அறிஞர்கள் விழாவிற்கு வருகைதந்திருந்தனர்.

திரு.செ,பத்மநாதன் தமது தலைமையுரையில் ''யோகர் சுவாமி கூறிய எப்பவோ முடிந்தகாரியம் என்ற வாசகத்தை நினைவு கொண்டு வித்துவான் தொண்டுகள்செய்யவேண்டும்' என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி விழாமலரை வெளியிட்டு வைத்தார். கி. சுப்பிரமணிய சாத்திரிகள் பேசுகையில் ''தமிழ் பாண்டித்தியம் பெற்ற நல்லறிஞர் ஒருவர் பாராட்டப்படுவது தமிழ் மொழிக்கு செய்யும் பெரும் தொண்டாகும். தமிழ் வளர்த்த பெருமையுமாகும்'' என்றார்.

பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணன் இ சுந்தரலிங்கம் க.சிவராமலிங்கம், செ. தேவதாசன் க.அருணசலம் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

## யாருடையது?

அச்சுவேலி கதிரிப்பாய்யைச் சேர்ந்த திரு சிவசம்பு குமாரசாமியின் அடையாள அட்டையையும் ஒரு தொகை பணத்தினையும் திரு கு. தவராசாவும் திரு தம்பிராசா தர்மலிங்கத்தின் அடையாள அட்டையையும் சிறுதொகைப் பணத்தினையும் திரு எஸ். செல்லத்துரையும் நுணவில் கண்டிவீதியைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி நாகலிங்கத்தின் அடையாள அட்டையை திரு நா. ஜெயந்திரனும் மல்லாகம் திரு இரத்தினம் வீரசிங்கத்தின் அடையாள அட்டையை திரு. நா. தியாகராசாவும் அரியாலை புங்கம் குளம் வீதியைச் சேர்நத திரு மகேந்திரன் ரவிச்சந்திரனின் அடையாள அட்டையை திரு அ. அன்பழகனும் யாழ் சோனகதெரு நாவலர் வீதியைச் சேர்ந்த திரு கலீல் கச்சுமுகமதுவின் அடையாள அட்டையை திரு ஆ.வசந்தகுமாரும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## திணைக்கள ஜீப் மீட்கப்பட்டது

[கிளிநொச்சி]

கிளிநொச்சி காணித் திணைக்கள ஜீப், நேற்று முன்தினம் நண்பகல் இனந்தெரியாத நபர்களினல் கடத்தப்பட்டது.

இந்த ஜீப் நேற்று கிளிநொச்சியில் இரத்தினபுரம் என்னும் இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

## தன்னலங்கருதா...

(4ம் பக்க 5 கலத் தொடர்ச்சி)

வதில் அவர் மகாசமர்த்தர் இதற்கு அவர்வாழ்க்கையில் எத்தனையோ எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம். மிக்க விவேகமாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்துகொள்வார். அவரிடம்ஒரு குறையை யான் சொல்ல முடியுமானல் தன்னலத்தைப் பாராமல் பொதுநலத்தையே பார்க்கும் முறை அவரிடம் இருந்தது என்று சொல்லவிரும்புகிறேன். தன்னலங்கருதாத் தலைமைப் பண்பு பாராட்டத்தக்கது என்பதை யான் ஒத்துக்கொள்கின்றேனயினும் திரு. தம்பர் அவர்களிடம் அந்தக்குறை குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்தமைகண்டு உள்ளூர யான் கவலைப்பட்டதுண்டு

பெரிய தொழிற்சங்க வாதியாயும், கூட்டுறவாளராயும், விடுதலைப் பேராட்டம் நடத்தியவராயும், சிறந்த சிந்தனையாளராயும், சிறந்த ஆசிரியராயும், சர்வ சமய சமாச நோக்குடையவராகவும் கலாவிநோதராயும் திகழ்ந்த திரு தம்பர் அவர்கள் ஆற்றியபணிகளோ அளப்பில. அவற்றையெல்லாம் ஈண்டு விசிப்பிற் பெருகும்.

அவரது அன்பை யாம் மறக்கமுடியாது. அவர் பிரிவால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவது எளிதன்று. ''ஆடவன்'' என்ற வார்த்தையால் பெருமையோடு யாம் புகழத்தக்க ஓர் அண்ணலாக விளங்கிய திரு தம்பர் அவர்களுடைய திருப்பெயர் என்றென்றும் வாழ்க. அவர் ஆன்மா சாந்தியடைவதாக.

# வடபகுதியில் தோற்றதால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மூன்று பிரதானநிலையங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

பயங்கரவாதிகள் இப்போது சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுகளை வெடிக்க வைக்கின்றனர். இதற்குக் காரணம் நாட்டில் வன்முறையைக் கிளப்பிவிடுவதன்மூலம் தான் தமது நோக்கங்களை அடையமுடியுமென்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். ஒரு தாக்குதல் பலரின் உயிரைப் பறிக்கலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருப்பதால் இதனை அவர்கள் செய்கிறார்கள். இப்படியாகக் குண்டுகளை வெடிக்கச்செய்வதற்கு சந்தைகள், ரயில்வே நிலையங்கள், பஸ்தரிப்பு இடங்கள், ரயில்கள், படமாளிகைகள் ஆகியவற்றைத் தெரிந்தெடுத்துக் குண்டுகளை வைக்கலாம். மக்கள் கூட்டமாக நிற்கும் இடங்களை இதற்குப் பயன்படுத்தலாம். பயங்கரவாதிகள் மக்களுடன் சேர்ந்து அளவளாவி அவர்கள் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டபின்னர், இதனைச் செய்வதால், அவர்களை இவை கண்டுகொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. அவர்களின் தந்திரம், மக்கள் விழிப்பாக இருக்கும் சமயத்தை கைவிடச்செய்து, தாக்குவதே அவர்கள் நோக்கமாகவுள்ளது. பயங்கரவாதிகளை இனங்கண்டுகொள்வதற்கு மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். தம்மைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதை மிகவும் கண்காணித்தபின்னர் அவர்கள் நடமாட்டம் பற்றி சந்தேகம் எழும்பட்சத்தில், அதுகுறித்து பாதுகாப்புப் படைக்கு அறிவிக்கவேண்டும். வீட்டில் இருக்கும்போது புதியவர்கள் நடமாடினல், தெரிந்வர்கள் கூடப் பரபரப்பாக நடமாடினல், சந்தேகத்துக்கு இடமாக நடமாடினல் கூட அது பற்றியும், அத்தகைய நபர்கள் பற்றியும் பொலிஸாருக்கோ, பாதுகாப்புப் படையினருக்கோ தகவல் கொடுக்க வேண்டும். பார்சல்கள். அல்லது பார்சல்களைக் கொண்டு செல்லும் போதே சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினல், அது பற்றியும் தகவல் கொடுக்க மக்கள் தயங்கக் கூடாது.

அரசாங்க' பொது ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்கள் தமக்குக் கீழ் உள்ளவர்கள் ராச வேலைகளில் ஈடுபட மாட்டார்கள் என்பதையும் ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும். பொது இடங்களில் கைவிடப்பட்ட சந்தேகத்துக்கு இடமான பொருட்களைப் பொது மக்கள் தொடக் கூடாது. மக்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். பயங்கரவாதிகள் இனம், சாதி, மதம் என்பவற்றைக் கவனிக்காதவர்கள். அவர்கள் குண்டுகளை வைக்கும் போது பாதிப்படைபவர்கள் எல்லா சமூகத்தவர்களும் என்பது அவர்களுக்குத் தெரியும். வன்முறையை ஏற்படுத்தவே அவர்கள் இதனைச் செய்கிறார்கள்.

### மூன்று முகாம்களைப் பிடித்தனர்

இந்த வாரத்தில் பாதுகாப்புப் படையினர் மூன்று முகாம்களை பிடித்தனர். பல பயங்கர வாதிகளையும் கைது செய்தனர். நேற்று பயங்கரவாதிகள் நிலையமொன்று பிடிபட்ட போது மூவர் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை குச்சவெளியில் பயங்கரவாதிகள் சிலர் கைது செய்யப்பட்டனர். கொழும்பில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதிகள் பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாரிகளுக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

## நெல்லியடியில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குட்படுத்தப்பட்டுள்ளார்.

நெல்லியடியில் நேற்றுக் காலை ஐந்து மணிக்கு ஆரம்பமான இச்சோதனை நண்பகல் வரை நீடித்தது.

வாகனங்கள் மறித்துச் சோதனையிடப்பட்டதுடன், அடையாள அட்டை வைத்திருக்காதவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இச்சோதனையின் போது நெல்லியடிப் பகுதியில் வாகனப் போக்குவரத்துத் தாமதப்பட்டது. (க)

## மட்டுநகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலர் தன்னுடையமகள் ஜீடின் நளினி, தமது வீட்டில் தங்கிப் படித்த மன்னரைச் சேர்ந்த ஆஷா, தனது புதல்வியின் சக மாணவியான மட்டக்களப்பு கன்னன்குடாவைச் சேர்ந்த மாலினி ஆகிய மூவரையும் காணவில்லையென்று மட்டக்களப்புப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னரும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் காணமல்போய் பின்னர் இவர்களை வாகரையிலுள்ள வீடொன்றிலிருந்து வாழைச்சேனைப் பொலிசார் மீட்டு, அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்தது தெரிந்ததே.

## மெதடிஸ்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம்பிள்ளை, வடமாகாண அதிபர் சங்க தலைவரும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அதிபருமான திரு. கே. அருணசலம், யாழ். சென்ஜேன்ஸ் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா ஆகியோர் சென்றிருந்தனர்.

கல்லூரிகளை ஆரம்பிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுமென்றும், கடற்கரைப் பகுதியிலுள்ள வாடிவீடு, நீதவான் விடுதி, மாவட்ட நீதிபதி விடுதி, நகரசபைக் கட்டடம் ஆகியவற்றிலிருந்து பொலிசாரும், இராணுவத்தினரும் நவம்பர் மாதம் 19-ம் திகதி முற்றாக வெளியேறுவார்கள் என்றும் புதிய இடத்தில் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் குளியலறை மலசலகூடங்கள் போன்ற அடிப்படைத் தேவைகள் அமைப்பதில் சுமார் இரண்டு அல்லது இரண்டரை வாரம் செல்லும் என்றும் அவை நவம்பர் 19ம் திகதிக்கு முன் பூர்த்தியாகி விடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

ருத்தித்துறையில் கல்லூரிகளுக்குஅருகில்உள்ள பொலிஸ் நிலையமும், இராணுவ முகாமும், நவம்பர் 19ம் திகதிஅண்மையிலுள்ள வேறுஇடத்திற்கு முற்றாக மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்வி வளர்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படாமலிருக்க, இம்மாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மீண்டும் ஆரம்பமாகுமென்றும், நவம்பர் மாதம் நடுப்பகுதியில் ஹாட்லி கல்லூரியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அதிபர் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை தெரிவித்தார்.

பிரிகேடியர் நளின் செனிவரத்தன- அதிபர் குழு சந்திப்பதற்கான ஏற்பாட்டை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் செய்திருந்தார். (க)

## பார்சல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கு அருகிலும், மருதானை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகிலும் மூன்று குண்டுப் பார்சல்கள் இருப்பதாகப்பரப்பப்பட்ட வதந்தியே,போக்குவரத்துத் தடைக்குக் காரணமாகும்.

கண்டுபிடிக்கப் பட்ட பார்சல்களில் குப்பை கூளமே காணப்பட்டது.

# கல்வியின் பொதுநோக்கம்

[ஹாட்லிக்கல்லூரியினதும், புனித பரியோவான் கல்லூரியினதும் முன்னுள் அதிபரும், சிறந்த கல்விமானுமான திரு. கே. பூர்ணம்பிள்ளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகிறது ]

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மனதைக் குழப்பக்கூடியசம்பவங்களால், எதுவாயிருந்தாலும் அவற்றுல் கவரப்படாது தங்களுடைய கல்வியில் கவனம் செலுத்த வேண்டுமென்பது எனது திடமான கருத்தாகும். நாட்டின் பிரச்னைகள்பற்றி மாணவர்கள் படித்தறிந்து கொள்ள வேண்டும். இவற்றில் தீவிரமாக ஈடுபடக் கூடாது. இந்த வகையிலேயே கல்வியை முடித்த பின்னர் மாணவர்கள் தமது கடமையைத் திறம்பட செய்யமுடியும். கல்வியின் மூலம் மாணவர்கள் பரந்தளவு அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

''1930-ம் ஆண்டளவில் சீனுவில் வெளிநாட்டுப் படையெடுப்பு இடம்பெற்றபோது, சீனுவிலுள்ளஇளைஞர்கள் இராணுவத்தில்சேர முன்வந்தனர். ஆனல் சீனத் தலைவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் சென்று கல்வியைப் பூரணப்படுத்துமாறு அந்த இளைஞர்களுக்கு அறிவுரை வழங்கினர். அதே போல் எங்களுடைய இளைஞர்களுக்கு எது சரிஎன்றும்; எதனைத் துணிவுடன் செய்யமுடியும் என்ற அறிவையும் ஆண்டவன் வழங்குவாராக என நான் பிரார்த்திக்கிறேன்.

இங்கிலாந்தில் ஒரு பாடசாலை அதிபர் ஒரு ஜெர்மன் ஆசிரியரின் வருகையை எதிர்பார்த்திருந்தார். ''ஜெர்மனியர் எந்த விஷயத்திலும் மிக சாமர்த்தியமானவர்கள் என்று தனது உதவி ஆசிரியர் ஒருவருக்கு குறிப்பிட்டு, இந்தப் பாடசாலை பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் தொகுத்து நமது விருந்தினர் வரும்பொழுது திருப்தியாக விடையளிக்கவும்'' என்று பணித்தார். ஜெர்மன் விருந்தினர் வந்த போது பள்ளிக்கூட விபரங்கள் முழுவதையும்நன்கறிந்துவைத்திருந்த உதவி ஆசிரியர், விருந்தினர் கேட்ட முதல்கேள்வியிலேயே அதிர்ச்சியடைந்தார். இந்தப் பள்ளிக்கூடத்தின் நோக்கம் என்ன என்பதே அவரின் முதல் கேள்வி. எதிர்பார்த்த எல்லா கேள்விகளுக்கும் விடைகள் தயாரித்த ஆசிரியர், இந்த ஒரு கேள்விக்குமட்டும் விடையளிக்க முடியாமல் போய்விட்டார்.

நாமெல்லோரும் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர் இந்தப் பொதுநோக்கத்தைப் புரிவதில்லை. ஒரு பாடசாலையின் விசேட நோக்கத்தை அறிந்திருந்த போதும், பாடசாலைகளின் பெருநோக்கத்தை அறியத் தவறுகின்றோம். அது மூன்று விதப்படும் :-

1—சமுதாயத்தின் பண்பை இன்றைய இளைஞர்களுக்கு அளித்தல்.

2—மாணவர்கள் மூலம் மக்கள் முயற்சியால் சமுதாயத்தில் நன்மாற்றம் ஏற்படுத்தல்.

3—துரிதமாக மாறுபடும் சமுதாயத்திற்கு ஏற்ற விதத்தில், மாணவர்களை வாழச் செய்வதற்கு ஏற்ற முறையில் பாடசாலைகள் தொழிற்பட வேண்டும்.

இவற்றுள் முதலாவதே மிக முக்கியமானது கற்றோர்மூன்று பெரும் விடயங்களை முக்கியமாக கருதியிருக்கின்றனர். 1—அறிவு திரட்டல். (a) புவியியல், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூலம் அறிவைத் திரட்டல்,

2—திறமையை வளர்த்தல், (b) பேச்சு, எழுத்து என்ற கலைகள் மூலமும், உடற்பயிற்சி மூலமும் திறமையை விருத்தி பண்ணலாம். 3—பண்பட்ட மனிதனின் கோட்பாடுகள்.

பிக்னல் இக்கல்லூரியின் அதிபராகவிருந்த காலத்திலே யாழ்ப்பாண சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திஞர். ஹரிஜன் ஒருவருக்க இக் கல்லூரியில் அனுமதி வழங்கினுர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளை இக்கல்லூரியிலிருந்தும்விலக்கிக் கொண்டனர். இதனுல் கல்லூரியில் மாணவர்களின் தொகை 300 விருந்து 75 ஆகக் குறைந்தது. அதிபர் பிக்னல் இதில் உறுதியாக இருந்தார். கல்லூரியை விட்டு விலகியவர்கள் மீண்டும் கல்லூரிக்கு வந்தார்கள். ஒரு பாடசாலை எவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

விரைவாக மாறுபட்டு வரும் சமுதாயத்திற்கேற்ப வாழக்கூடிய வகையில் இளைஞர்களை பாடசாலைகள் உருவாக்க வேண்டும். இக் கல்லூரி அதிபர் கம்பியூட்டர் வகுப்புகளையும், ஆங்கிலமொழி ஆய்வு கூடத்தையும் ஆரம்பித்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

விஞ்ஞானம் தொடர்பான அறிவு 5 வருடத்திற்கொரு முறை இருமடங்காக விரிவடைகிறது. இந்தப்புதிய விஞ்ஞான அறிவு எமது தேசிய மொழிகளில் கிடைப்பதில்லை. ஆங்கில மொழியில் கல்வி கற்பவர்களே சிறந்தகல்விமான்களாக விளங்குகிறுர்கள் என்பது ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆறும் வகுப்பிலிருந்து 10ம் வகுப்பு வரை சில பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிக்கலாம் என்பது இலங்கையில் வளர்ந்து வரும் அபிப்பிராயமாகும். பத்தாம் வகுப்பிற்குப் பின்னர் கல்வி கற்கும் மொழி ஆங்கிலமாகஇருக்கவேண்டும். க.பொ.த.உயர்தரவகுப்பில் கற்கும்மாணவர்களுக்கு ஆங்கில அறிவை விருத்திசெய்வதற்காக மேலும் ஒருவருடம் கூடுதலாக அளிக்கப்படவேண்டும்.

ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கு தனியார் பாடசாலைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென் பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. ஆங்கில ஆசிரியர்களுக்குத் திறமையான பயிற்சியளிக்கப்பட வேண்டும். தேவையேற்படின் இவர்கள் பயிற்சிக்காக வெளி நாடுகளுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கு கூடிய நேரம் தேவை. ஆங்கிலத்தை கற்கின்ற ஒரு குழுவில் பதினைந்து பேருக்குறபட்டவர்கள் இருக்கவேண்டும்.

எனவே எமது மாணவர்கள் சிறந்த சாதனைகளை ஏற்படுத்தி சிந்தனைத் திறமையுடையவர்களாகவும் வரமுடியும்.

## மாதகல் சம்பவம்:
# பாதிக்கப்பட்ட வீடுகளை அரச அதிபர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினுல் பாதிக்கப்பட்ட வீடுகளை, யாழ். அரசாங்க அதிபர் தலைமையிலான ஒரு குழு பார்வையிட்டது.

கடந்த 17-ம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக மாதகல் பகுதியில் உள்ள வீடுகளில் ஆயுதப்படையினர் முகாமிட்டு மூன்று நாட்களுக்குக் கடும் சோதனை நடத்தியிருந்தது தெரிந்ததே. அக்காலகட்டத்தில் மீன்வாடி, வள்ளங்கள், வீடுகள், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச்செயலாளருமான திரு. எம். பஞ்சலிங்கத்துக்கு முறையீடு செய்திருந்தனர்.

யாழ். அரசாங்க அதிபர், சமூகசேவை உதவிப் பணிப்பாளர், யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும், யாழ் செயலக உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி. பாலசிங்கம், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சண்முகநாதன் ஆகியோர் மாதகல் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்ட மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் பாலசுப்பிரமணிய ஐயரையும் யாழ். அரச அதிபர் சந்தித்து அவரது நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கரணவாய், அச்சுவேலி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை விசாரித்து நடவடிக்கை எடுத்ததுபோன்று மாதகல் பகுதி மக்களுக்கேற்பட்ட சேதவிபரங்கள் குறித்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் மூலம் சமர்ப்பிக்கவேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபர் அப்பகுதி மக்களிடம் கேட்டுக் கொண்டார். [மா)

## சிரமதானம்

(அச்சுவேலி)

உணவு போஷாக்கு வாரத்தைமுன்னிட்டு யாழ் திட்டமிடல் பணிமனையும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் இணைந்து அடுத்த மாதம் 1ம் திகதிவியாழக் கிழமை நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலில் சிரமதானம் செய்யவுள்ளனர்

உதவி அரசாங்க அதிபர்திரு கு.கிட்ணர் தலைமையில் நடைபெறும் இச் சிரமதானத்தில் மகளிர் பணியகப் பயிற்சியாளர், கிராம முன்னேற்றச்சங்கப்பிரதி நிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், விசேட சேவை அலுவலர்கள், கிராம சேவை அலுவலர்கள் கலந்து கொள்வார்கள்.



## ஓய்வு பெறும் அதிபர்

1951-ம் ஆண்டு தான் கல்வி கற்ற யாழ். இந்துக்கல்லூரியிலே பட்டதாரி ஆசிரியராகக் கல்விச்சேவையில் சேர்ந்த திரு செ. குணபாலசிங்கம் அங்கு ஈராண்டுகள் சேவை செய்த பின் காணி அபிவிருத்தி உத்தியோகத்தராக மூன்று மாதங்கள் மட்டும் சேவையாற்றி மீண்டும் கல்விச் சேவையே தமக்கு மிகப் பொருத்தமெனக் கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரிய சேவைக்குத் திரும்பினுர் என்றுல், அது தாம் கற்ற கல்வி சமுதாயத்திற்கு முழுதாகப் பயன்படவேண்டுமென்ற பேரவாவன்றி வேறு ஒன்றுமல்ல.

கொக்குவில் இந்துவில் புவியியல் ஆசிரியராகவும் பின்னர் உப- அதிபராகவும் பத்தொன்பது வருடங்கள் சேவை செய்தார் இக்காலத்தில் கல்வி டிப்ளோமாப் பயிற்சியும் பல்கலைக்கழகத்தில் பெற்றுர். கல்விச் சேவையின் முதலாம் தர விஷேட அதிபர் பதவிபெற்று அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியிலும், பின் வேலணை மத்திய கல்லூரியிலும் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றினுர்.

இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் வேலணை மத்திய கல்லூரி பல துறைகளி

(7-ம் பக்கமும் பார்க்க)

விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி. மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள்

''பாயர்'' உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய ''சேர்கோப்பூர்''

450 மி. லீ. — 57 ரூபா. 3 25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

நெல் விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) ''ஹெடோனல் எம். 60%''
450 மி. லீ. — 60/- ரூபா. 2 லீற்றர் — 245/- ரூபா.

(2) ''ஹெடோனல் எம். 40%''
450 மி லீ. — 38/- ரூபா

(3) ''ஹெடோனல் D. 55%''
450 மி லீ. — ரூபா 57-50

ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னர்.

## 2மணிநேரம் சோதனை

(யாழ்ப்பாணம்)

மினிவான் ஒன்றை சந்தேகத்தின் பேரில், துரத்திச் சென்ற ஆயுதப்படையினர், உரும்பராயில் வைத்து பலத்த சோதனை செய்தனர்.

சுமார் இரண்டு மணி நேரம் நடந்த சோதனையின் பின் வான் செல்ல அனுமதிக்கப் பட்டது. (க)


**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சய தாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்—ராதா
சிவச்சந்திரன்
**ஆனந்த ராகம்**
(புதியபிரதி- ஈஸ்மன்கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Carolyn Judd, Teri Gusman
Angel Colbert
FIVE ANGRY WOMEN
(Strictly For Adults)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15, 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adts Only)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** [யாழ்.]
30-10-84 வரை
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - விஜயா
**ஒரே வானம் ஒரேபூமி**
(புதிய பிரதி)
விரைவில்
ரஜனி - ராதா
**சிவப்பு சூரியன்**

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குங்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

24 To 27
**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
Fred Williamson
**Blind Rage**
(Action - Karte. Film)
தீரமிக்க குருடர்களின் திட்டமிட்டப்பட்ட வங்கிக் கொள்ளை- திடுக்கிட வைக்கும் கராட்டி சண்டைகள்

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CANAN THE BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி- பிரமிளா- ஸ்ரீதேவி
**கவரிமான்**
ஈஸ்மன்கலர் - புதியபிரதி]


# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—10 26-10-1984)
வாரம்—வெள்ளி
திதி—துதியை பிற்பகல் 2-37வரை
நக்ஷத்திரம்—விசாகம் பிற்பகல் 2-46

மேடம்:- கௌரவத்தைப் பாதிக்க கூடிய சம்பவம் இடம் பெறலாம் தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் பெரியவர் ஒருவருடன் பகைத்து கொள்ள நேரிடும்.

இடபம்:- பசுமையான சம்பவங்கள் இடம் பெறும் களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ் நிலை தென்படும் காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

மிதுனம்:- நம்பிக்கை மோசடி நடக்கும் நண்பர்களும் காலை வாரிவிடுவர் தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

கடகம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் இதன் மூலம் பணமும் செலவாகும் அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

சிங்கம்:- கற்றதன் பயன் இன்று கட்டாயம் கிட்டும் அறிஞர்கள் போற்றுவார்கள் ஆதரவும் பெருகும்.

கன்னி:- நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும் சுற்றுடலில் மதிப்பு உயரும் பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்

துலாம்:- பொருள் முடை தென்படும் கடன் படநேரிடும் கொடுத்தவாக்குறுதியைநிறைவேற்ற முடியாது போகலாம்

விருச்சிகம்:- வெளியிடத் தொடர்புகளில் மந்த நிலை காணப்படும்தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம் உடல் நலம் பாதிக்கக்கூடும்.

தனுசு:- பிரச்சினைகள் பல இன்று நல்ல முடிவை அடையும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும் பேச்சில் நிதானம் பெருமையைத்தரும்.

மகரம்:- சகோதரவழியால் சஞ்சலம் தோன்றக் கூடும் உள் வீட்டிலேயே பூசல் தலை தூக்கும் உஷாராகஇருக்கவும்.

கும்பம்:- அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும் செய்காரியங்களில் தனிப் புகழ் பரவும் முயற்சியால் முன்னேற்றத்துக்கும் இடமுண்டு

மீனம்:- மக்களால் மகிழ்ச்சி மனம் நிறைய வாழ்வு புதமையில் நாட்டம் புதுப் பொலிவுமுண்டு மகிழ்ச்சிகரமான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பிரெஞ்சு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கக் கண்டெடுக்கப்படாதிருந்தால் தமது சேவை சர்வதேச ரீதியில் பரிகசிக்கப்பட்டிருக்கும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பிரெஞ்சுத் தூதரக நடவடிக்கை குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் ஆட்சேபனையும் ஆத்திரமும் வெளியிடுள்ளனர்.

பிரெஞ்சுத் தூதரகத்தில் கண்டெடுக்கப்பட்ட இரு குண்டுகளும் பெரும் சக்திவாய்ந்தவையல்லவென்றும், அவற்றினல் கேடு அதிகமில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. இவற்றுடன் இவற்றை வெடிக்கச் செய்யும் சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இச்சம்பவம்குறித்து பிரிட்டனுக்கு விஜயம்செய்திருக்கும் பிரெஞ்சுத் தலைவர் மித்தரோனே அல்லது பிரிட்டிஷ் பிரதமர் தட்சரோ எதுவித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

ஆனல் பிரெஞ்சு அரசாங்க அதிகாரிகள், இக்குண்டுவைப்பு பிரெஞ்சு பாதுகாப்பு அதிகாரிகளால் தனிப்பட்ட முறையில் நடத்தப்பட்டதென்றும், உத்தியோக பூர்வமான தாகப் பிரெஞ்சு அரசின் வேண்டுகோளின்படி எதுவும் செய்யப் படவில்லையென்றும் தெரிவித்தனர். [கி]

## ஓய்வுபெறும்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

லும் வளர்ச்சி பெற்று யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணிக் கல்லூரிகளில் ஒன்ருகத் திகழ்ந்தது. யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று அப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல முன்னேற்றமான நடவடிக்கைகள் எடுத்து வரும் காலத்தில் உடல் நலக் குறைவால் தனதுசேவையைத் தொடரமுடியாது இளைப்பாறியுள்ளார்.

கல்விச் சேவை தவிர பல ஆசிரிய சங்கங்களிலும் மிக உற்சாகத்துடனும் பொறுப்புடனும்பல உயர் பதவிகளை வகித்துள்ளார். வட மாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தில் பத்து ஆண்டுகள் பொருளாளர் ஆகவும் 5 ஆண்டுகள் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டு தமது கடமையைச் செவ்வனே செய்தவராவார்.

**வி. எஸ். பாலசிங்கம்**

மாலை
5-30 உங்கள் நாடு (ஆங்கில நிகழ்ச்சி)
5-35 நகைச்சுவைத்தொடர் (ஆங்கில நிகழ்ச்சி)
6-00 விளையாட்டு நிகழ்ச்சி (தமிழ்)
6-15 கல்வி நிகழ்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 குடும்ப நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-45 பொது அறிவு நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 ஆங்கில நிகழ்ச்சி
9-10 இசை நிகழ்ச்சி
9-30 செய்திகள் ஆங்கிலம்)
9-50 இசை நிகழ்ச்சி தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 ஒலிபரப்பு முடிவு

## மாதகல் அகதிகள் பாடசாலையில் தஞ்சம்

[சுழிபுரம்]

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலையில் நூற்றுக் குமதிகமான மாதகல் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களுக்கு உணவு வகைகளை சுழிபுரம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தாராளமாக வழங்கி வருகின்றனர்.

இவர்கள் யாவரும் பீதியுடன் இருக்கின்றனர், சுழிபுரம் கிழக்கு சனசமூக நிலையத்தினர் மற்றும் பொது இயக்க பிரதிநிதிகள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

## ப. நோ. கூ. சங்க கிளையில் கொள்ளை

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு ப.நோ.கூ.சங்க கிளை ஒன்றில் புடவைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கட்டிடத்தின் பின் புறமாக உட்புகுந்த கொள்ளையர்கள் இவற்றை திருடிச்சென்றுள்ளனர். களவுபோன பொருட்கள் பற்றிய விபரங்கள் இன்னும் அறிவிக்கப் படவில்லை.

## கந்த ஷஷ்டி

(யாழ்ப்பாணம்

இன்று வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனாபிஷேகமும். விஷேச பூஜையும், திருச்செந்தூர் புராணபடனமும், மாலை சந்தனக்காப்பு சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியச பூர்வ ஷண்முகார்ச்சனையும், வசந்தமண்டப பூஜையும், திருவிழாவும் நடைபெறும்.


# வேலையாட்கள் தேவை

புதிதாக ஸ்தாபித்த வேலைத்தளத்திற்கு

| | | |
|---|---|---|
| மெக்கானிக் | — | 2 |
| ரிங்கர் | — | 2 |
| வயரிங் வேலை செய்பவர் | — | 1 |
| தச்சு வேலை செய்பவர் | — | 2 |
| மேற்கூறிய வேலைகளில் ஒரு அளவு அனுபவம் உள்ளவர்கள் | — | 10 |

விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் விலாசத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும்.

Advertised by:
RTR HOLDINGS (Private) Ltd.
Next to Sub - Post office,
MOOLAI, CHULIPURAM.
Tel. Vaddu. Exch 231
[400]


## கோட்டு விற்பனவு விளம்பரம்

சிதம்பரப்பிள்ளை சபாரட்னம், விளானை, காரைநகர்.

காலஞ்சென்ற சின்னையா சபாரட்னம், காரைநகர் அவர்களின் தத்துவக்காரன் (Case No: T / 1820 - D. C. J.)
— வழக்காளி

எதிராக

சின்னையா இராசரத்தினம்,
வண்ணார்பண்ணை, வடமேற்கு, யாழ்ப்பாணம்.
— எதிராளி

யாழ்ப்பாண மாவட்டக் கோட்டின் M. B. 10055-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1984ஆம் வருடம் கார்த்திகை மாதம் 30-ம் திகதி (30-11-84) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூ. 17141/-ம், 6-6-1968 — 15-3-1969 வரைக்கும் ரூ. 11,000/க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத் தொகைகளுக்கும் இருக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூ. 633-05 செலவில் ரூ. 250/- கழிக்கவும்.

### ஆதனவிபரம்

1. வடமாகாண யாழ்ப்பாண மாவட்டமும், பகுதியும், வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை வடமேற்கில் இருக்கும் காணியின் பெயர் 'இத்திக்கொடல்' விஸ்தீரணம் நிலப்பரப்பு 4ம் குளி 17ம். எல்லை கிழக்கு: முருகர் செல்லையாவின் ஆதனம். வடக்கு: கணபதிப்பிள்ளை பொன்னையாவிற்கும், பிடாரி அம்மன் கோவிலுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு: ஒழுங்கை. தெற்கு: நாகேந்திர ஐயர், சுப்பிரமணிய ஐயரின் ஆதனம். இதடங்கலும். அதற்குரிய உரித்துக்களும்.

2. வடமாகாணம் வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையில் இருக்கும் காணியின் பெயர்: 'எருக்கலம்பிட்டி'. விஸ்தீரணம் நெற்பரப்பு 9. எல்லை கிழக்கு: வீதி, வடக்கு: இராசையா கைம்பெண் ஆச்சி முத்துவின் ஆதனம். மேற்கு: பொன்னையா இராசரத்தினத்தின் ஆதனம். தெற்கு: முத்தர் தம்புவின் ஆதனம். இதடங்கலும் அதன் உரித்துக்களும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

16A, அம்மன் றோட்,
கந்தர்மடம். 420


கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# 21 கட்டடங்களைத் தகர்க்க திட்டமிடப்பட்டிருந்ததாம்!

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை காலை கொழும்பிலுள்ள மிகப் பெரிய பிரதான 21 கட்டிடங் களைத் தகர்த்தெறிவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டிருந் ததாக இரகசியப் பொலிசாருக்குக் கிடைத்த தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடற்கரைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைக்கப் பட்ட குண்டு வெடித்ததின் மூலம் இத்திட்டம் தவிர்க்கப் பட்டதாம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக 25 தீவிரவாதிகள் கொழும்பு வந்ததாகவும், இவர்கள் கொழும்பிலுள்ள பாரிய கட்டிடங்களில் ஒப்பந்தகாரர்களினுல் வேலைக் கமர்த்தப்பட்டுள்ள தீவிரவாதிகளுடன் இணைந்து குண்டுகளை வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் இரகசியப் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்களில் சில தீவிரவாதிகளைக் கடந்த திங்கட்கிழமை காலை குண்டுகள் வைக்கும் இடங்களில் வாகனமொன்று வந்து நிறுத்தியதாகவும் பொலிஸ் விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

இரகசியப் பொலிசார் தற்போது இந்த வாகனத்தைத் தேடி வலை விரித்துள்ளனர் இந்த வாகனம் இன்னமும் கொழும்பில் நிற்பதாக இரகசியப் பொலிசார் கருதுகின்றனர்.

கொழும்பில் தீவிரவாதிகளின் முகாம் கடந்த இரு மாதங்களிலேயே ஏற்படுத்தப் பட்டதாகவும், இந்த முகாமில் 30 க்கும் அதிகமான தீவிரவாதிகள் இருப்பதாகவும் இரகசியப் பொலிசாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கொழும்பிலுள்ளதீவிரவாதிகளின் முழு விபரங்களும் இரகசியப் பொலிசாருக்குத் தெரியவந்துள்ளபோதிலும், இவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளதால், இவர்களை கைதுசெய்யமுடியாதுள்ளது.

கடற்கரைப் பொலிஸ் நிலையத்திற்குக் குண்டுவைக்க முயன்றபோது குண்டுக்குப் பலியான இரத்தினசபாபதி பரிபூரணன் கொழும்பிலுள்ள தீவிரவாதிகள் குழுவின் தலைவரென்று நம்பப்படுகிறது.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து மிகமுக்கியமான தகவல் இப்பொழுது கிடைத்திருப்பதாகவும் விரைவில் மேலும் பலர் கைதுசெய்யப்படலாமென்றும் இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ஆறு மாதங்களின் பின்னர் இளைஞர் விடுதலை!

(பண்டத்தரிப்பு)

சுமார் ஆறுமாதங்களுக்கு முன்பு சுழிபுரத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்ட மாதகலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த மார்ச் மாதம் 5ம் திகதி செல்லப்பா சிவகுமார் 19 வயது என்ற இந்த இளைஞர் சுழிபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பின்னர் இவர் பலாலி, ஆனையிறவு இராணுவ முகாம்களில் விசாரணை செய்யப்பட்ட பின்னர் கடந்த ஆறு மாதங்களாக வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

இவரைக் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்த இராணுவத்தினர் 3 மாதங்களுக்கு யாழ். மாவட்டத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று நிபந்தனையும் விதித்துள்ளனர்.

## நிர்மலா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மா அதிபர் ஒருவர் ''பயங்கரவாதி''களுக்கு உதவி செய்திருா் என்று வெளிவந்த செய்தியை அமைச்சர் மறுத்தார்.

நிர்மலாவை தென்னிலங்கையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து அவர் தப்பிச்செல்வதற்கு உதவினர் என்று பத்திரிகையொன்றில் செய்தி வெளிவந்தது.

''இந்தச்செய்தியில் உண்மை எதுவும் இல்லை'' என்று அமைச்சர் சொன்னுர்.

## மின்னேரியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஜேசிறியும், மின்னேரியாவில் ஸ்ரீமாவோவின் மருமகனை ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு விஜய குமாரதுங்க'வும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

## வவனியா கல்வி அதிகாரிவீட்டில் ரூ.75,000 நகைகள்கொள்ளை!

(வவனியா)

வவனியா — யாழ்ப்பாணம் வீதியிலுள்ள வவனியா வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. நாகராசாவின் இல்லத்தில் நேற்று முன்தினமிரவு இனந் தெரியாத மூன்று நபர்களினுல் சுமார் 75,000 ரூபா பெறுமதியான நகைகளும், 700 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரம் ஆகியன அடங்கியிருநதன.

கொள்ளையர்கள் ஓட்டைப் பிரித்தே வீட்டுக்குள் இறங்கியுள்ளனர். இவர்களிடம் கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் இருந்தன. கொள்ளையர்கள் முகமூடி, தொப்பி, கையுறை போன்றவற்றை அணிந்திருந்தனராம்.

சம்பவம் நடைபெற்றதினம் வட்டாரக் கல்வியதிகாரி வீட்டில் இருக்கவில்லை. அவர் அலுவல் காரணமாக கொழும்பு சென்றிருந்தார். வீட்டில் அவரின் மனைவியும், இரு பெண் பிள்ளைகளுமே இருந்தனர்.

---

மாணவியைப் பலிகொண்ட இக்கார் நாச்சிமார் கோவிலடிக்குச் சமீபமாக எரிக்கப் பட்டது. ஆத்திரம் கொண்டவர்கள் இக்காரை எரித்ததாக கூறப்படுகிறது.

பெரியபுலம் பாடசாலையில் பயிலும் இம்மாணவிகள், பாடசாலை விட்டதும், வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இச் சம்பவம் நடந்தது

காயமடைந்த ராதா மயக்கமடைந்த நிலையில் யாழ். அரசினர் ஆஸ்பத்தரி 8ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்த மற்ற மாணவி, சுபா, சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளார்.

சந்தேகநபரான கார்ச்சாரதி பொலிஸல் பாதுகாப்பில் உள்ளதாக கூறப்படுகிறது.

(க)

## பிரதம நீதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களம் பிரதம நீதியரசர் பதவியை ஏற்பதில் திரு. சிவா பசுபதிக்கு அதிகளவு அக்கறையில்லை என்று தெரிவித்துள்ளது.

இதனையடுத்து உயர்நீதிமன்றில் அதிசிரேஷ்ட நீதியரசராக இருக்கும் திரு. எஸ். சர்வானந்தாவே அடுத்த பிரதம நீதியரசராக நியமிக்கப் படுவார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

நீதியரசர் திரு வனசுந்தராவின் பெயரும் இப்பதவிக்கு அடிபட்டது. ஆயினும் உயர் நீதிமன்றில் இவரைவிடத் திரு. சர்வானந்தாவே மூத்தவராக இருப்பதால் அவருக்கே கூடுதல் வாய்ப்பு எனத்தெரிவிக்கப்பட்டது.

ஜனதிபதி திரு. ஜயவர்த்தனவும், அவரது மிக முக்கிய அமைச்சர்களில் ஒருவரும், நீதித்துறை அலுவல்களில் ஈடுபாடு கொண்டவருமான தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும், அடுத்த பிரதமநீதியரசராக ஒரு தமிழரே நியமிக்கப்படுவர் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

[கி]

## குமாரின்

1ம் பக்கத் தொடர்ச்சி)

தரணி ரஞ்சன் மெண்டிஸ் தெரிவித்தார்

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. திலக் கப்ரூ முன்னிலையில் திரு குமார் பொன்னம்பலம் அரசியலமைப் ,ச்சட்டத்தின் 6வது நிரந்தர சட்டத்திற்கமைய விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டமை தொடர்பாக 'ஈழநாடு', 'டெயிலி நியூஸ்', 'ஐலன்ட்', 'திவயன' பத்திரிகையில் பிரசுரித்தசெய்தியைஆட்சேபித்து தாக்கல்செய்து மனுமீதான விசாரணை நேற்று நடந்தது. குறித் செய்தி தொடர்பாக பத்திரிகைய ளருக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கும், அது தொடர்பான விசாரணை நடத்துவதற்கும், இந்த மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லையென பத்திரிகையாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்த ஆட்சேபனைமீதன விவாதத்தை நடத்த மேல் விசாரணையை நவம்பர் 9-ம் திகதிக்கு ஒததிவைத்தார்

ஈழநாடு சார்பில் பதில் ஆசிரியர் பி எஸ் பெருமாள், டெயிலி நியூஸ் சார்பில் திரு. சரத் மலசேகரா, ஐலன்ட் சாரபில் திரு பிரசாத் குணவர்த்தனு, 'திவயன' சார்பில் திரு. சுனில் சலுபோவல ஆகியோர் ஆஜராகினர்.

---

## மரண அறிவித்தல்

### தம்பையா மாசிலாமணி

யாழ்ப்பாண ஐக்கிய கூட்டுறவுச்சங்கத்தின் (Jaffna Co-operative Stores Ltd) கணக்காளரும், காலம் சென்ற மலாயன்பென்சனியர் திரு. திருமதி தம்பையாவின் சிரேஷ்ட புத்திரனும், திரு. சிவஞானம் (Retired Civil servant presently Sri Lanka Embassy Washington), திருமதிகள் மனேன்மணி நடராசா,ராசமணி வைத்திலிங்கம். பத்மாவதி ஞானசம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னரின் ஈமைக் கிரியைகள் 25/10/84 வியாழக்கிழமை தெல்லிப்பழையில் நடைபெற்றது. (444)

## மரண அறிவித்தல்

### ஆச்சிமுத்து சிதம்பரநாதன்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஆச்சிமுத்து 23-10-84 இலண்டனில் காலமானுர். இவர் காலஞ்சென்ற சிதம்பரநாதனின் அன்பு மனைவியும், வடிவேற்பிள்ளை, கமலாதேவி [U. K.], ஆகியோரின் அன்புத்தாயாரும், விசாலாட்சி. N. S கந்தையா [U K] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரியைகள் இலண்டனில் நடைபெறும்.

தகவல்

சி. வடிவேற்பிள்ளை

45, செட்டித்தெரு.
நல்லூர். 435

## மரண அறிவித்தல்

### திருமதி மாக்ரட் நவரஞ்சிதமலர் (மலர்)

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி மாக்ரட் நவரஞ்சிதமலர் [மலர்] காலமாகிவிட்டார். அன்னர் இளைப்பாறிய தலைமை ஆசிரியரும், முன்னள் அச்சுவேலி கிராமசபைத் தலைவருமான மனுவேற்பிள்ளை அவர்களின் அன்புமனைவியும், அருமைத்துரை [அபுதாபி] ராசமலர் ஆகியோரின் தாயாரும், ஞானப்பிரகாசம் [பிரதம தபால் அதிபர். யாழ்ப்பாணம்], கதறீன் ஆகியோரின் மாமியாரும், சாந்திகுமார், பிரியதர்ஷ்னி, சசிக்கலா, பிறையன், ஏட்றியன், சுசித்திரா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னரின் பூதவுடல் இன்று 26-10-84 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல்4-00 மணிக்கு சென். மாக்ரட்ஸ், அச்சுவேலி இல்லத்திலிருந்து புனித, சூசையப்ப சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றர், உறவினர்,நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

(445) A. R. மனுவேற்பிள்ளை

## மரண அறிவித்தல்

### செல்வி நிமாலினி வீரசிங்கம்

இவர் திரு. வீரசிங்கம் [யாழ். மத்திய கல்லூரி] திருமதி இராசமணியது மூத்த புதல்வியும், லெனின் ராஜா, பாமினி, தீபராஜா, தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யாழ் பெரியபுல மகாவித்தியாலய ஆறும் வகுப்பு மாணவியும்-25-10-84 வியாழக் கிழமை அகால மரணம் அடைந்தார். அன்னரின் ஈமைக்கிரியைகள் 26-10-84 பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லம் கலட்டி இராமநாதன் வீதியில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

446 திரு, திருமதி வீரசிங்கம்.

## மரண அறிவித்தல்

### -Dr. கந்தையா யோகராசா-

செட்டிப்பாளையம் அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி Dr. கந்தையா யோகராசா காலமானுர். இவர் இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், பிரியதர்சினி, சோபனு, ரேணுகா, அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், அத்தியடியைச் சேர்ந்த திரு திருமதி கந்தையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், திருமதி கமலாம்பிகை தம்பிமுத்து, இராசலிங்கம் (தொலைத் தொடர்பு திணைக்களம், மன்னர்) திருமதி பரமேஸ்வரி, குமாரசாமி, சுந்தரலிங்கம் (Fuji) தில்லைவிநாயகலிங்கம், புவனஸ்வரி, மன்மதராசன், ஆகியோரின் அன்புச் சகோதரரும், இளைப்பாறிய ஆசிரியர் திரு திருமதி பொன்னையா தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருஷ்ணும்பாள் சண்முகானந்தன் (U K) தேவகி செல்வவிநாயகப்பிரகாசம்,கிருஷ்ணகுமார், ஜெயக்குமார் (Canada), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் நீர்வேலியில் அன்னரின் இல்லத்தில் இன்று (26-10-84) வெள்ளிக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக் காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல் – பொ.கிருஷ்ணகுமார்

431

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.